களம்-19 வெற்றி-1

இலஞ்சம் தவிர்! நெஞ்சம் நிமிர்!

ஜனவரி 2021


# நேர்மை நெறி


[ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்]

Regd.No.349/2001


"எப்பொருள் யார்யாவாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு".

# (NAERMAI NERI)


ரூ.10/-


# இலவசம் என்று அரசோ அரசியல்வாதியோ எது கொடுத்தாலும் அது லஞ்சமே...

# லஞ்சம் = சாபம்





PUBLISHED BY

**ஊழல் எதிர்ப்பு இயக்கம் சென்னை**

பதிவு மற்றும் செயல் அலுவலகம் : 155, "நம்பகம்"
கொன்னூர் நெடுஞ்சாலை, அயன்புரம், சென்னை - 600 023.
Cell : 8778312823
e-mail : acmchennai2001@yahoo.co.in
Website : anticorruptionchennai.com

## தலைவர் மடல்

**அன்பார்ந்த உறுப்பினர் சகோதர சகோதரிகளே!**

**வணக்கம். இம்மடல் மூலம் மீண்டும் உங்களை தொடர்பு கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.**

எச்சரிக்கை: அன்பார்ந்த உறுப்பினர்களே, நம்து இயக்கம் ஏற்கெனவே இரு நிர்வாகிகளை கோவிட்-19 வைரசுக்கு பலி கொடுத்துவிட்டது. கொரோனாவால் இனி ஒரு பலி கூட இருக்கக்கூடாது. எனவே, ஒவ்வொரு உறுப்பினரும், கோவிட்-19லிருந்து பாதுகாத்துக்கொள்ள அரசு அறிவித்துள்ள பாதுகாப்பு நெறிமுறைகளைக் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டுகிறோம்.

அடுத்த எச்சரிக்கை: நமக்கு நாமே விடுத்துக்கொள்ள வேண்டியதாகும். ஆம், அடுத்த பொதுத்தேர்தல் வந்துவிட்டது. காட்சிகள் அரங்கேற்றம் ஆரம்பமாகிவிட்டன. காட்சிகளை நோக்கின், மிகுந்த மனவேதனையை அளிக்கிறது. கட்சிகளுக்குள் போட்டா போட்டி. எதற்கு, அடுத்த 5 ஆண்டுகள் நம்மை எப்படி கொள்ளை அடிக்கலாம் என்பதே.

தமிழகத்தை ஆளும் கட்சியோ, சுமார் 2.50 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ரூ.2500/- பொங்கல் பரிசாக மொத்தமாக ரூ.6250/- கோடி வரிப்பணம் வீணடிக்கவுள்ளது. இந்தத் தமிழ்நாட்டின்

இயக்கத்தின் ஆரம்பம் முதல், தன் வாழ்நாள் வரையில், தலைவர் : அமரர் **திரு.C.S.குப்புராஜ்** அவர்கள், தன் மறைவிற்கு பிறகும் தன் மகள் மூலம் கொடை வழங்கி இயக்கத்தின் வளர்ச்சிக்கு வித்திடுகிறார்.


வாய்மையே வெல்லும்

**நீலா கண் மருத்துவகம்**

**Dr.ஜெயந்தி ஆனந்தன், MBBS., D.O.,**

21, நல்லப்பன் தெரு, மைலாப்பூர், சென்னை - 600 004.

**போன் : 044-24642755 / 9884245069**

**பார்க்கும் நேரம் : திங்கள் முதல் வெள்ளி வரை**



காலை 9.30 முதல் 11.30 மணி வரை

மாலை 4.00 முதல் 8.00 மணி வரை

சனிக்கிழமை காலை 10.00 மணி

முதல் மாலை 4.00 மணி வரை

(ஞாயிறு விடுமுறை)



**தாணத்தில் சிறந்தது கண் தானம்**

ஜனத்தொகையே சுமார் 7.5 கோடி, ஆக, ஒவ்வொரு வீட்டுக்கும், அல்லது, குறைந்தது 90% வீடுகளுக்கு, ஆளுங்கட்சி மக்கள் வரிப்பனத்தை இலவசமாக கொடுக்கவுள்ளது. என்னே விந்தை ஆக, சுதந்திரம் கிடைத்து, சுயாட்சி மலர்ந்து, தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் 90% மக்கள் தங்களின் சுய சம்பாதியத்தில் பொங்கல் கொண்டாட வக்கற்றவர்களாக உள்ளார்கள் என்று அரசு கணித்துள்ளது. ஆனால், தமிழகம் இந்தியாவிலேயே முன்னேறிய மாநிலங்களில் முதலிடத்தில் உள்ளது அதற்குக் காரணம் எனது ஆட்சிதான் என்று தி.மு.க.வும் அ.தி.மு.க.வும் மாறி மாறி உரிமை கொண்டாடுகின்றன. ஆனால், தேர்தல் என்று வந்துவிட்டால், மொத்த மக்களும் ஏழைகளாகி விடுகின்றனர். என்னே கொடுமை பேசியே, மக்களைக் கெடுத்த இந்த கட்சிகள்தான் இப்படி என்றால், இந்தியாவின் வளர்ச்சிதான் தமது மூச்சு, தேசியமே எமது மூச்சு என்றும், ஊழலை ஒழித்து மக்களை வளர்ச்சிப்பாதையில் இட்டு செல்வோம் என்று திரும்ப திரும்ப சூளுரைக்கும் மத்தியில் ஆளும் கட்சியோ, ஊழலை அரசியல் லாபத்திற்காக பயன்படுத்துவதில் மிகவும் திறமையாக செயல்படுகிறது. சேகர் ரெட்டியிடம் கைப்பற்றிய பணத்திற்கு என்ன கணக்கு, அந்த கடவுளுக்கே வெளிச்சம். மேலும், சென்னை திரு.ஆர்.கே.நகர் இடைத்தேர்தல் சமயத்தில் வருமானத்துறையால் கைப்பற்றப்பட்ட ஆவனங்களை வைத்து, அது உண்மை என்பதால்தான் இந்திய தேர்தல் ஆணையமே தேர்தலை ரத்து செய்தது. ஆக, ஊழல் ஊர்ஜிதமாகியும் எந்த நடவடிக்கையும் இல்லை.

ஆனால், அந்த தேர்தல் ஆணையமே, ஊழல் நடந்துள்ளது என்று கூறியும் இதுவரை எந்தத் தொடர் நடவடிக்கையும் இல்லை. அந்த ஊழல்வாதிகள் ஒகோ ஆகா என்று பவனி வருகிறார்கள். இதுதான் இந்த நாட்டின் தலைஎழுத்து. இதற்குக்காரணம், அள்ளி வீசும் எச்சில் காசுக்கு, சுயமரியாதையை காற்றில் விட்டுவிட்டு, மக்கள் கையேந்தி நிற்பதாலால்தான். இந்நிலை என்று மாறுமோ என்றுதான் இந்த நாட்டிற்கு விமோச்சனம் கிடைக்குமோ தெரியவில்லை. அன்று எழைகள் வசதி படைத்தோரிடம் கையேந்தினர். இன்றோ, வசதிபடைத்தவர்களிடம் வரியாக வசூலித்து அரசு அவர்களுக்கு பிச்சை போடுகிறது. ஆக, ஏழைகள், அன்றும் இன்றும் எந்தவகையிலும் முன்னேறவில்லை. தன்னிறைவு இன்றி கையேதிகளாகவே உள்ளனர்.

இந்திய மக்கள், தாம் இயற்றிய அரசமைப்பு சட்டத்தில், அனைவருக்கும் சமுதாயத்திலும், பொருளாதார நிதி வசதியிலும், உரிமைகளிலும் சமத்துவத்தை (justice, social, economical) நிலைநாட்ட விரும்பினர்.

**நேர்மை நெறியில் குறைந்த செலவில் விளம்பரம் செய்து பயன்பெறுவீர்!**

விளம்பரக் கட்டண விபரம்

முழுப்பக்கம் : ரூ.2000/- அரைப்பக்கம் ரூ.1000/- கால்பக்கம் ரூ.500/-

இதழில் வெளிவருகின்ற கட்டுரைகள் விளம்பரங்கள் படைபாளிகளையே சார்ந்தது.

நேர்மைநெறி நிர்வாகமோ, ஆசிரியரோ பொறுப்பல்ல.

ஆனால், இன்றைய நிலையோ, மேற்குறிப்பிடவாறு, ஆண்டுக்கு ஒருமுறை வரும் பொங்கல் பண்டிகையை சுயமான சம்பாதியத்தில் கொண்டாட வக்கில்லாமல், மக்கள் அரசின் பிச்சையில் கொண்டாட உள்ளனர். இந்நிலையில், நமது இயக்க உறுப்பினர்கள் அரசால் வழங்கப்படும் இந்த இலவசத்தை உதாசீனப்படுத்துவதோடு, மக்களுக்கு இந்த இழிநிலையைப் புரிய வைக்க வேண்டுகிறோம். அரசின் இந்தப் பொங்கல் இலவசம் சந்தேகமின்றி எமது பார்வையில் லஞ்சமே! லஞ்சமே!! லஞ்சமே!!! எனவே, அரசின் இந்த ஊழல் வலையில் வீழாமல் எச்கரிக்கையாக இருக்க வேண்டியது ஒவ்வொரு குடிமகனின் அவசியம். . எனவே, இந்த இழிநிலையைப் போக்க

ஒன்றுபடுவோம்! முனைந்து அறவழியில் செயல்படுவோம்!! வெற்றிபெறுவோம்!!!..

நன்றி வணக்கம்...

அன்புடன்,

(ந.சுப்ரமணியன்)

---

**இயக்கத்துடன் தொடர்பு கொள்ள:**

**திரு N சுப்ரமணியன், தலைவர் : 9444274352**
**திரு V கார்த்திகை ராஜன், பொதுச்செயலாளர் : 87783 12823**

**திருமதி பாக்யலட்சுமி, மேலாளர் : 90031 25142**

**E- Mail : acmchennai2001@yahoo.co.in**
**Website : anticorruptionchennai.com**

---

**இயக்கத்துக்கு நன்கொடைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.**
**நன்கொடைகள் வருமான வரிச்சட்டம் பிரிவு 80 (பு) யின் கீழ் விலக்கு(சலுகை) உள்ளது. பணத்தை கீழ்க்கண்ட வங்கிக்கு NEFT மூலமாக அனுப்பலாம் .**

**Indian OverSeas Bank, Ayanavaram Branch (IFSC Code: IOBA0000009)**
**Savings A/C No: 000901000041657**

# வேளாண் சட்ட திருத்தங்களால் பாதிப்பு விவசாயிகளுக்கு மட்டுமல்ல

-V.கார்த்திகை ராஜன்,
இயக்கப் பொதுச்செயலர்

இன்றைய நெருக்கடியான நிலையில் கூட சற்றே வளர்ச்சியில் உள்ள ஒரே துறை விவசாயம் தான். நாட்டின் முதுகெலும்பாக இருக்கும் விவசாயத் துறையில், மூன்று மசோதாக்களுக்கு கடந்த ஜூன் மாதம் 5ம் தேதியன்று நடந்த மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேலும், அவை பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டன.. ஆனால் நாடு முழுவதும் உள்ள விவசாயிகளிடம் அதிருப்பதிக்கு உருவாக்கியுள்ளது.. இது ஏன் ஏற்பட்டது?

கொரான காலத்தில் அவசரம் அவசரமாக இயற்றப்பட்ட மூன்று வேளாண் சட்ட திருத்தங்களினால் விவசாயிகளுக்கு மட்டும் பாதிப்பு அல்ல; பொது மக்களுக்கும்தான். இச்சட்டங்கள் விவசாய பொருட்களின் வாணிபம் சார்ந்தது என்பது தான் உண்மை.

<u>என்னென்ன சட்டங்கள்?</u>

- அத்தியாவசியப் பொருட்கள் திருத்தச் சட்டம் 2020
- விவசாய விளைபொருள் வியாபாரம் மற்றும் வர்த்தக (மேம்பாடு மற்றும் எளிமைப்படுத்துதல்) சட்டம் 2020
- விவசாயிகளுக்கு (அதிகாரமளித்தல் மற்றும் பாதுகாப்பு) விலை உத்தரவாத ஒப்பந்தம் மற்றும் விவசாய சேவைகள் சட்டம் 2020.

<u>அத்தியாவசியப் பொருட்கள் திருத்தச் சட்டம் 2020</u>

அத்தியாவசியப் பொருட்கள் திருத்தச் சட்டத்தை எடுத்துக் கொண்டால், இந்தியாவில் வெங்காயம், பருப்பு போன்ற அத்தியாவசிய பொருட்களின் விலை உயரும்போது, அவற்றை ஏற்றுமதி செய்யவும் சேமித்து வைக்கவும் அரசு அவ்வப்போது கட்டுப்பாடுகளை விதிக்கிறது. இப்போது வந்துள்ள சட்டத் திருத்தத்தின் படி இம்மாதிரி கட்டுப்பாடுகளை விதிக்க முடியாது.

<u>விவசாயத்துறைக்கு முதலீடுகளை அதிகரிக்கும்</u>

விவசாயத்துறைக்கு முதலீடுகளை அதிகரிக்கும் விளை பொருட்களை உற்பத்தி செய்யவும், சேமித்து வைக்கவும், வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லவும், விற்பனை செய்யவும், விவசாயிகளுக்கு முழு சுதந்திரம் இந்த சட்டத் திருத்தத்தின் மூலம் அளிக்கப்படும் என்கிறது மத்திய அரசு. அதோடு இந்த சட்டத்தின் மூலம் இந்தத் துறையின் பொருளாதாரம் மேம்பட்டு, நேரடி அந்நிய முதலீடு விவசாயத் துறையில் கிடைக்குமென மத்திய அரசு நம்புகிறது. அதாவது விவசாயத் துறைக்கு தேவையான குளிர்பதன கிடங்குகள் போன்றவற்றைக் கட்டத் தேவைப்படும் முதலீட்டை இந்தச் சட்டம் எளிதாக்கும்.

<u>விவசாய பொருட்களுக்கு அதிக விலை கிடைக்கும்</u>

இரண்டாவதாக உள்ள விவசாய விளைபொருள் வியாபாரம் மற்றும் வர்த்தக சட்டத்தைப் பொருத்த வரை, விவசாய விளை பொருட்களை மாநிலத்திற்கு உள்ளேயும், வெளியேயும் எங்கும் வர்த்தகம் செய்ய வழி வகுக்கிறது. இதன் மூலம் விவசாயிகளுக்கு தங்கள் உற்பத்தி பொருட்களுக்குக் கூடுதல் விலை கிடைக்குமென அரசு கூறுகிறது.

<u>என்ன பிரச்சனை?</u>

ஆனால் இந்த சட்டத்தினால் விவசாய வர்த்தகத்தின் மீது மாநில அரசு கொண்டிருக்கும் கட்டுப்பாடு, இந்தச் சட்டத்தின் மூலம் காணமல் போகிறது என்கிறது. அதாவது மாநில அரசுகளின் சட்டம் செயல்படுத்த முடியாமல் போகிறது. ஏனெனில் மற்ற மாநிலத்தைச் சேர்ந்த வியாபாரிகள், மாநிலத்தில் எங்கு வேண்டுமானாலும் வந்து பொருட்களை வாங்கிச் சொல்லலாம். உதாரணத்திற்கு தமிழகத்தில் விளையும் நெல்லினை அதிகமாக மற்ற

மாநிலங்கள் வாங்கிச் செல்லாம். ஆனால் இதனால் தமிழகத்தில் நெல்லுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என்கிறது தான் இங்கு அச்சமே.

ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் என்கிறது மூன்றாவது சட்டம்

விலை உத்தரவாதம், விவசாய சேவைகள் ஒப்பந்தம் மற்றும் விவசாய சேவைகள் சட்டம் 2020. விவசாயிகளுடன் எந்த மூன்றாவது நபரும் ஒப்பந்தம் செய்துகொள்ள இந்தச் சட்டம் வழிவகுக்கிறது. அதாவது விவசாய கான்ட்ராக்ட்களுக்கு இந்தச் சட்டத்தின் மூலம் சட்டரீதியான பாதுகாப்பு கிடைக்கும்.

மூன்று தரப்பினருக்கும் பயன் மத்திய அரசினை பொறுத்த வரையில், இந்த மூன்று சட்டங்களின் மூலம் விவசாயிகள் தங்கள் விலை பொருட்களுக்கு நல்ல விலையைப் பெற முடியும். அதோடு கூடுதலான வர்த்தக வாய்ப்புகளும் கிடைக்கும் என்கிறது. மேலும் இதனால் நுகர்வோரும் வர்த்தகர்களும் பயனடைவார்கள். ஆகவே விவசாயிகள் உட்பட மூன்று தரப்பினருக்கும் பயனளிக்கக்கூடிய சட்டங்கள் இவை என்கிறது மத்திய அரசு தரப்பு.

மானியங்கள் என்ன ஆவது?

இந்த மசோதாக்கள் சில வகையில் விவசாயிகளுக்கு நன்மை அளிக்கும் விதமாக இருந்தாலும், மின்சாரம் மற்றும் நீர், உரங்கள் என சிலவற்றிற்கு கிடைத்து வரும் மானியங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம் என்ற அச்சமும் நிலவி வருகின்றது. இந்த புதிய சட்டங்கள் விவசாயத்தை நேரடி அரசு ஆதரவிலிருந்து, அதிக சந்தை வாய்ப்புள்ள சார்ந்த அமைப்புக்கு நகர்த்துவதற்கான கட்டமைப்பை நிறைவு செய்கின்றன. இப்படி பல வகையிலும், இந்த மசோதாக்கள் பற்றிய விவாதங்கள் நடந்து கொண்டு தான் இருகின்றன.

பொது மக்களுக்கு வர உள்ள பிரச்சனைகள்

1 அத்தியாவசிய பொருட்கள் 1955 காலாவதியதலால், பொது மக்களுக்கு அப்பொருட்கள் தட்டுப்பாடு ஏற்படுத்தி விலையேற்றம் செய்து வணிகர்கள் லாபம் சம்பாதிக்கலாம்.

2 MRTP சட்டம் 1969 யும் கடைப்பிடிக்காததால், கடத்தலும் பதுக்குதலும் தான் அதிகமாகும். கட்டுப்பாடு ஏதும் இல்லாதலால் நாட்டில் செயற்கையான பற்றாக்குறை தட்டுப்பாட்டை உருவாக்கி வணிகர்கள் அதிக லாபம் பெருக்குவதையே விரும்புவார்கள். பெரு நிறுவனங்களும் ,பெரிய செல்வந்தர்களாலுமே பொருட்களின் போக்குவரத்தையும் சேமிப்பு கிடங்குகளையும் நிர்மானிக்க முடியும். சாதாரண விவசாயியால் எதுவுமே செய்ய முடியாது. மின் வர்த்தகம் (E COMMERCE) என்பதும் பங்கு வர்த்தகம் போன்ற சூதாட்டமே. வணிகர்கள் விவசாயிகளை வாட்டி, குறைந்த விலைக்கு உற்பத்திப்பொருட்களை வாங்கியபின் கொள்ளை லாபத்திற்கு பொதுமக்களுக்கு விற்பதிற்கே, இச்சட்டங்கள் உதவுகின்றன.

3. பெரிய விவசாயிகள் விவசாயத்துடன் வாணிபமும் செய்வதால் அவர்களுக்கு இழப்பு இருக்காது. ஆனால், சிறு மற்றும் நடு விவசாயிகளுக்கு வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்படும். பொது மக்களும் செயற்கை தோற்றத்தில் ஏற்படுத்தபடும் விலைவாசியால் பணம் இழக்க நேரிடும்.

4. விவசாயிகளின் வருமானம் இந்த சட்டங்களினால் இரட்டிப்பாகும் என்ற வாதத்தில் நியாயம் இருப்பதாகத் தெரியவில்லை. சாதாரண விவசாயிகளின் நிலை தாழ்ந்துபோகும்.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில், இந்த சட்ட திருத்தங்களே தேவையில்லை. ஊரடங்கு அமுலில் உள்ள கொரான காலத்தில், இவற்றை அவசரம் அவசரமாக நிறைவேற்றியதின் நோக்கம் விவசாயிகளின் முன்னேற்றத்திற்கு அல்ல. இதை நிறைவேற்ற பாராளுமன்றத்தின் இரு அவைகளிலுமே கால அவகாசம் கொடுக்கப்படவில்லை. இது பெரு வணிகர்களுக்காகவே இயற்றப்பட்ட சட்டம் போல் தான் தெரிகிறது.

சிலரை பல காலம் ஏமாற்றலாம், பலரை சில காலம் ஏமாற்றலாம், ஆனால் எல்லோரையும் எல்லா காலங்களிலும் ஏமாற்ற முடியாது.

**ஆண்டு**-AM/**ஆயுள்**-LM **உறுப்பினர் எண்**/No:

**லஞ்சம் தவிர்**. **நெஞ்சம் நிமிர்**

**ஊழல் எதிர்ப்பு இயக்கம், சென்னை, (பதிவு எண் : 341/2001)**

**ANTI CORRUPTION MOVEMENT,CHENNAI, (REGN NO.341/2001)**

**155, கொன்னூர் நெடுஞ்சாலை, அயன்புரம், சென்னை- இந்தியா- 600023**

**Website: "anticorruptionchennai.com" மின்னஞ்சல் : acmchennai2001@yahoo.co.in**

**உறுப்பினர் சேர்க்கை படிவம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | **பெயர்**/Name | | AFFIX PHOTO/<br>**புகைப்படம் ஒட்டவும்** |
| 2. | **றந்த தேதி**/*Date of Birth* | | |
| 3. | **கூடுதலாக ஒரு பாஸ்போர்ட் அளவு புகைப்படம் இணைக்கப்பட்டு ள்ளதா**?<br>Whether one more passport size photo is annexed. | | |
| 4. | **கல்வி**/Education | | |
| 5. | **தொழில்**/Profession | | |
| 6. | **முகவரி** /Address<br>(**பின்கோடுடன்**/with Pincode | | |
| 7. | **ஆதார் எண்**/Adhar No. | | |
| 8. | **தொலைபேசி எண்**/Ph.No. | | |
| 9. | **மின்னஞ்சல் முகவரி**/ Email id | | |
| 10. | **உறுப்பினர் கட்டண செலுத்திய விபரம்**/details of payment of Membership fees | **(DD-வரைவோலை//Cheque-காசோலை/NEFT-நெஃப்ட் ஏற்றுக்கொள்ளப்படும்/acceptable)** | |
| 11. | **ஊழல் பற்றிய தங்கள் கருத்துக்கள்**/your views on corruption | | |

**உறுதி மொழி/ OATH**

**நான் என் வாழ்க்கையில்எச்சூழ்நிலையிலும் எந்த காரணம் கொண்டும் லஞ்சம் கொடுக்கவோ வங்கவோ மாட்டேன் என்றும்**, **இந்த இயக்கத்தின் விதிமுறைகளுக்கேற்ப நடந்து கொள்வேன் என்றும்**, **நமது நாட்டில் நிலவும் எல்லா வகை ஊழலையும் ஒழிக்க முழுமூச்சுடன் பாடுபடுவேன் என்றும்**. **மற்றும் நான் எந்த ஒரு அரசியல் கட்சியிலும் எந்தவொரு பதவியிலும் இல்லை என்றும் உறுதி கூறுகிறேன்**./ I hereby declare and swear that I will not pay/receive bribe in my life on any circumstances; I will abide by rules of this movement; I will work devotedly to eradicate all forms of corruption in this country and I am not holding any office in any form in any political party.

**தேதி**/Date

**இடம்**/Place

**விண்ணப்பதாரர் கையொப்பம்**/Applicant's signature

**அலுவல் பணிக்கு மட்டும்/For Office Use Only**

| |
|---|
| **உறுப்பினர் சந்தா ரூ**. /- **பெற்ற ரசீது ஏண்**. **தேதி**<br>Membership fees Rs. /- Receipt No. Date: |
| **ஆண்டு**/**ஆயுள் உறுப்பினராக அனுமதித்த செயற்குழு தீர்மாண எண்**. **தேதி**:<br>Enrolled as AM/LM Member in EC Resolution No. Dated |
| **பொதுச்செயலாளர்**/**தலைமையக செயலர் கையொப்பம்**<br>General Secretary/HQ Secretary |

**ஆண்டு சந்தா**/Annual Subscription- Rs. 300/- , **அயுள் சந்தா**/Life Subscription Rs. 2500/-

**குறிப்பு**/Note: **வங்கி கணக்கு விபரம்**/Bank Account details: IOB,, Ayanavaram Branch (IFSC Code: IOBA0000009)

**சேமிப்பு கணக்கு எண்**/ Savings A/C No: 000901000041657 . **இரு பாஸ்போர்ட் அளவு போட்டோக்கள் மற்றும் அதார் கார்டு இனைக்கப்படவேண்டும்**. Enclose two passport size photos and Adhar card.

**"அரசு கொடுக்கும் இலவசம்..?"**

"மாதம்தோறும் உழைக்காமலேயே அது ஏழை மக்கள் என்றாலும் இலவசமாக பணம் கொடுக்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தினால் என்னவாகும் ? என்று படிக்காத மேதை காமராஜர் அந்த காலத்திலேயே ஒரு நிகழ்ச்சியில் தெளிவாக பேசி உள்ளார்."

"பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்த காலம்."

"தஞ்சாவூர் வெண்ணாற்றங்கரை நீரேற்று நிலையத்தில் ஒரு நிகழ்ச்சி..."

"நிகழ்ச்சியில் படிக்காத மேதை காமராஜர் தனக்கே உரிய பாணியில் பேசியது ...."

"நாட்ல இருக்கிற எல்லாருக்கும் பணம் வேணும்....."

"ஏதாச்சும் இயலாமையை சொல்லி அரசாங்கம் பண உதவி பண்ணனும் என்று கேட்கிறாங்க...எனக்கு ஒன்னும் பிரச்சினை இல்லை...."

"பண நோட்டு அடிக்கிற மிஷின் எங்க கிட்டேதான் இருக்கு....."

"எவ்வளவு வேண்டுமானாலும் அச்சடிக்கலாம்னேன்..."

"அடிச்சு உங்கள் இஷ்டப்படியே ஆளுக்கு ஒரு மூட்டை பணம் கொடுத்துடுவோம்னேன்..."

"இப்போ பணம் இல்லாதவங்களே நாட்டிலே கிடையாது...."

"கொஞ்ச நாள் கழிச்சு கடைத்தெரு போனீன்னா எல்லா கடையும் பூட்டி கெடக்கும் அரிசி பருப்பு உப்பு புளி, மொளகா, எண்ணெய் -ன்னு ஒன்னும் கெடைக்காது....விவசாய வேலைக்கு ஆள் வராது... ஒரு வேலைக்கும் ஒருத்தனும் வரமாட்டான்..."

"எப்படி வருவான்னேன்....?"

"பணம் வேணும்னு தான் உழைக்கிறாங்க...."

"கட்டு கட்டா பணம் இருக்கும் போது எவன்தான் வேலைக்கு வருவான்...?"

"பணத்தை தலைமாட்டில் வச்சுக்கிட்டு வயித்துல ஈரத் துணியை போட்டு கிட்டு கெடக்க வேண்டியதுதான்..."

"ஊரே தூக்கம் வராம கெடக்கும்...."

"இப்போ அது மதிப்புள்ள பணம் காசு இல்லை.... வைத்துக்கொண்டு பேப்பர்தான்னேன்...."

"உழைப்பு தான் பணம்ன்னேன்..."

"பொருளாதாரத்திற்கு ஆதாரமே உழைப்புதான்...."

"உழைப்பு இல்லாமல் ஒன்னுமே கெடைக்காது.... ஒன்னுமே கெடையாது....இப்ப தெரிஞ்சுதா...?"

"உழைப்பு இல்லாமல் கட்டு கட்டா பணம் குடுத்தால் நாட்டோட பொருளாதாரமே சீர்கெட்டு கதை கந்தலாகி போகும்னேன்..."

"இது பொருளாதார படிப்பு படிக்காமல் நாட்டு நிலையையும் நாட்டு மக்கள் நாடித்துடிப்பையும் படிச்ச ஒரு பாமர மனுஷன், படிக்காத மேதை.. சொன்னது..."

"இது நமக்கு பாடம் புகட்டுவதாக உள்ளது. அதனால் கண்டபடி தேர்தல் வாக்குறுதிகள் அளிக்கும் தேசியக் கட்சிகள். மாநிலக் கட்சிகள் இனியாவது திருந்த வேண்டும்."

## இலவசம்

"ஒரு முறை ரஷ்ய அதிபர் ஸ்டாலின் ஒரு கோழியை நாடாளுமன்றத்துக்குள் கொண்டு வந்தார்.."

"அதன் இறகுகளை ஒவ்வொன்றாக பிடுங்கி கீழே போட்டார்."

"கோழி வலியால் கத்தியது துடிதுடித்தது."

"முற்றிலும் பிடுங்கிய பின் அதை தூக்கி கீழே எறிந்துவிட்டார்."

"பின்பு அதன் முன்னாள் சிறிது தானியத்தை தூவினார்."

"அந்த கோழி அதை தின்று கொண்டு மெதுவாக நகர்ந்து வந்தது,"

"மேலும் சிறிது தானியத்தை தனது காலடி வரை தூவினார் அதை பொறுக்கியபடி...."

"அந்த கோழி கடைசியில் அவர் காலடியில் வந்து நின்றது."

"அப்போது ஸ்டாலின் கூறினார் இதுதான் அரசியல்,"

"மக்களை எவ்வளவு வேண்டுமானாலும் கசக்கி பிழிந்து எடுத்து விட்டு..."

"கடைசியில் சிறிது தானியத்தை தூவினால் தம் காலடியில் வந்து கிடப்பார்கள் என்று கூறினார்."

"அன்று ரஷ்ய பாராளுமன்றத்தில் ஸ்டாலின் கூறிய கூற்றை இன்று வரை கட்சிகள் இலவசங்கள் என்ற பெயரில் மக்களின் வரிப்பணத்தை வாரி இறைத்து....,"

"மக்களை கொத்தடிமைகளாக மாற்றி வைத்துள்ளனர்."

"பணத்திற்கு ஓட்டை விற்கும் தேசத்தில் இனி நல்ல ஆட்சி அமைவது ஏது என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மை தானே."

---

### சுங்க கட்டணம் என்ற பெயரில் வழிப்பறிக்கொள்ளை

5000 கோடிக்கு ஒரு நெடுஞ்சாலையை தனியார் நிறுவனங்கள் போட்டார்கள் என்றால் அதை குறைந்தது ஐந்து வருடத்தில் சுங்க கட்டணம் மூலமாக அந்த பணத்தை லாபத்துடன் எடுத்து விடுவார்கள். ஆனால் பணம் எடுக்கப் பட்ட பிறகும் பத்து வருடங்களுக்கு மேலாக அதே நிறுவனம் சுங்க வரியை வசூலித்து கொண்டே இருப்பது எந்த வகையில் நியாயம்?

ஒரு லாரி மத்தியபிரதேசம் சென்று அங்கிருந்து பருப்பு வகைகளை ஏற்றுக்கொண்டு தமிழகம் வந்தால் அந்த லாரி குறைந்தது பத்தாயிரம் ரூபாய் வரை டோல்கேட் கட்டணம் செலுத்த வேண்டும் அங்கு வாங்கப்பட்ட பருப்பு வகைகள் கிலோ 40 ரூபாய் கூட இருக்காது கடைசியில் அது மளிகை கடைக்கு வரும்போது 120 ரூபாயாக மாறி விடுகிறது இப்பொழுது உணருங்கள் சுங்க கட்டணங்கள் விலையேற்றத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது என்பதை.

சரி இந்த சுங்கச்சாவடிகளையெல்லாம் நடத்துபவர்கள் யார் என்று பார்த்தால் பெரும்பாலும் மறைமுகமாக மத்திய அமைச்சர்கள் மாநில அமைச்சர்களின் பினாமிகள் எம்பிக்கள் என்று அரசியல்வாதிகள் தான் பெரும்பாலும் சுங்கச்சாவடிகளையும் சாலை போடும் நிறுவனங்களையும் பினாமிகளை வைத்து நடத்துகின்றனர் அதனால் எவ்வளவு தான் மக்கள் போராடினாலும் ஒரு எல்லைக்கு மேல் அந்தப் போராட்டங்கள் செல்வதே இல்லை.

அநியாயமான சுங்க கட்டணங்கள் அப்பாவி மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர் யார் இந்த பூனைக்கு மணி கட்டுவது என்று தெரியாமல் மக்கள் விழிபிதுங்கி நிற்கின்றனர்.

இதில் தமிழன் தான் மிகவும் இழிச்சவாயன், இந்தியாவிலேயே அதிகமான சுங்கச்சாவடிகளும் சுங்கக் கட்டணங்கள் மிக அதிகமாகவும் இருப்பது தமிழ்நாட்டில் மட்டுமே.

---

## இயக்கத்தில் இணைந்தவர்களை வாழ்த்தி வரவேற்கிறோம்

2021-22ல் இணைந்தவர்களின் ஆண்டு உறுப்பினர் பெயர் மற்றும் விலாசம்

AM.1/21-22
Thiru.G.Ponnaiya
No.2/52B, Pingala Vinayagar
Kovil Street,
Ponveli, Virudhungar-626111
Cell: 8012717471

# லஞ்சம் தவிர்!
# நெஞ்சம் நிமிர்!

நேர்மையாளர்களின் வாழ்வில் சில சம்பவங்கள்..

## காந்திஜிக்குக் கொடுத்த வாக்கு

1936 ஆம் ஆண்டு அலகாபாத் நகரசபையின் உறுப்பினராக லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் இருந்தார். அப்போது நகரசபை நிறைய நிலத்தை வீடு கட்டும் மனைகளாக்கி விற்கத் தீர்மானித்தது. அதைக் கவனித்துக்கொள்ளும் குழுவில் சாஸ்திரியும் ஒருவர்.

சாஸ்திரி வெளியூர் சென்றிருந்த சமயம், மற்றொரு உறுப்பினரான ஒரு நண்பர், நகரசபை தலைவரின் அனுமதி பெற்று தனக்கு ஒரு காலி மனையும் சாஸ்திரியின் பெயரில் ஒரு காலி மனையும் வாங்கி பணமும் கட்டி விட்டார்.

ஊரிலிருந்து திரும்பிய சாஸ்திரி அவர்கள், தன் பெயரில் வாங்கப்பட்ட மனை பற்றி கேள்விப்பட்டவுடன் அந்த நண்பரை அழைத்தார். "நகர அபிவிருத்தி குழுவின் உறுப்பினராக இருந்து கொண்டு நாமே வீட்டு மனைகள் வாங்கியது மாபெரும் தவறு" என்றும் இது எனக்குப்பிடிக்கவில்லை என்றும் கூறி, இரண்டு மனைகளையும் திருப்பி கொடுத்து விடுமாறு கண்டித்தார்.

அதற்கு அந்த நண்பர்,"உங்களுக்கென்று ஒரு சொந்த வீடும் கூட இல்லை. அதைக்கருத்தில்கொண்டு தான் உங்கள் பெயரில் ஒரு காலி மனை வாங்கினேன். இதில் எந்த தவறும் இருப்பதாகத் தெரியவில்லை" என்றார்.

உடனே சாஸ்திரி அவர்கள்,"பிறருக்கு காலி மனைகள் விற்கும் நாம். நமக்கென்று மனைகள் வாங்குவது தர்மமாகாது. தவிர, என் வாழ்நாளில் சொத்து எதுவும் சேர்க்க மாட்டேன் என்று மகாத்மா காந்திஜிக்கு வாக்கு கொடுத்திருக்கிறேன். இதிலிருந்து என்னால் நெறி பிறழ முடியவே முடியாது. எனவே, எனக்கு காலி மனை வேண்டாம்; திருப்பிக் கொடுத்துவிடுங்கள்" என்று கண்டிப்புடன் கூறினார்.

அவரது உறுதியான கொள்கையைக்கண்டு பிரமித்துப்போன நண்பர், இரண்டு காலி மனைகளையும் திரும்ப நகரசபையிடமே ஒப்படைத்துவிட்டார்.

## எனக்கு அரசியல் ஞானம் குறைவு

ஆனால் Mr.பொதுஜனத்தை பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன்.

1. நூற்றைம்பது சவரன் போட்டு மகளுக்கு திருமணம் முடித்தவன் வீட்டில் கலைஞர் TV ஓடுகிறது.
2. ஊருக்குள் 30 வீடுகள் வாடகைக்கு விட்டவன் பசுமை வீடு மானியத்தில் வீடு கட்டிக்கொண்டான்.
3. இரண்டு மகன்கள் அமெரிக்காவில் சம்பாதிக்கிறார்கள். ஆனால் அனாதைப் பணம் 1000 பெறுகிறார்கள்.
4. காரில் சென்று இலவச சேலை பெறுகிறார் ஒரு பெண்.
5. IT கம்பெனியில் லட்சத்தில் சம்பளம், ஆனால் ஜாதி படி ரேஷன்கார்டு படி தாலிக்கு தங்கம் பெறுகிறார் இன்னொருவர்.
6. 5000 சதுர அடியில் நீச்சல் குளத்துடன் வீடு. ஆனால் வீட்டுவரி ரூ.350. அதாவது 20 வருடத்திற்கு முன்இருந்த பழையவீட்டின் வரியே தொடர்கிறது.
7. இதுபோக ரேசன் பொருளை வசதியானவர்கள் வாங்கி, ஏழைகளுக்கு விற்பது. மானிய சிலிண்டர்களை கார் பார்டிகளுக்கு விற்பது.
8. பைனான்ஸ் + சீட்கள் நடத்தி கோடியில் விளையாடும் ஒருவர் Income #Tax என்றால் என்ன? என்கிறார்.
9. சென்சஸ் எடுக்கப்போனோம். மாதவருமானம் 4000, 5000 என்றுதான் அத்தனை குடும்பமும் கூசாமல் பொய் சொல்கிறது. அப்பத்தான் சலுகைகள் கிடைக்குமாம்.
10. இதெல்லாமே என் தெருவில் நடக்கும் உதாரணங்கள்.

கடைசியாக 4 கட்சியிடமும் பணம் வாங்கிக் கொண்டு ஓட்டுப் போடுகிறார் Mr.பொதுஜனம்.

1) முறையாக வரி செலுத்தும், சலுகைக்காக பொய் பேசாதமக்கள்.
2) ஊழல் இல்லாமல் மக்களுக்கு சேவை செய்யும் அரசியல்வாதி.
3) லஞ்சம் வாங்காது கடமையை செவ்வனே செய்யும் அரசு ஊழியன்.

நாடு உருப்பட இந்த மூவரும் வேண்டும்.
யார் முதலில் திருந்துவது. எப்படி திருத்துவது.

சட்டத்தின் வழியா?? சர்வாதிகாரமா?? கல்வியா??
ஆன்மீகமா?? எதைக்கொண்டு எதைத் திருத்துவது????
எனக்கு அரசியல் ஞானம் குறைவு.
எனவே நீங்கள் விடை சொல்லுங்கள்.

நாடும் மக்களும் ந.........ல்லா இருக்கட்டும்.

"தீதும் நன்றும் பிறர்தர வரா"....!

# வேளாண் சட்டங்கள்

டெல்லியில் மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராக நடைபெற்றுவரும் போராட்டம் நாளுக்கு நாள் வலுப்பெற்றுவருகிறது. இந்தச் சூழலில் பொருளாதார வல்லுநர் ஜெ.ஜெயரஞ்சனைச் சந்தித்து சில கேள்விகளை முன்வைத்தோம்

1. அரசு கொண்டு வந்திருக்கும் மூன்று சட்டங்களையும், விவசாயிகளின் நலனுக்காகக் கொண்டுவந்திருப்பதாகச் சொல்கிறார்கள்... நீங்கள் அவற்றை எப்படிப் பார்க்கிறீர்கள்?

மூன்றும் வியாபாரிகளுக்காகக் கொண்டுவரப்பட்டதாகப் பார்க்கிறேன். வியாபாரிகளுக்கும், வேளாண் விளைபொருள்களை வியாபாரம் செய்பவர்களுக்கும், விவசாயிகளுக்கும் இருக்கும் வியாபார உறவை தீர்மானிக்கக் கூடியவைதான் இந்தச் சட்டங்கள். விவசாயிகள் பயன்படுத்தும் தண்ணீர், மின்சாரம், விதைகள் போன்றவை குறித்து இந்தச் சட்டத்தில் எதுவும் இல்லை. விளைச்சலுக்குப் பிறகு சந்தைக்கு வரும்போது பொருள்கள் யாரிடம், எப்படிச் செல்ல வேண்டும் என்று சொல்வதுதான் வேளாண் விளைபொருள் சட்டங்கள் அல்லது வேளாண் வியாபாரிகளுக்கு உண்டான சட்டங்கள் என்று சொல்லலாம். ஆனால், இது விவசாயிகளுக்கான சட்டங்கள் இல்லை.

2. பொருளாதார நிபுணர் ஜெயரஞ்சன் விவசாயிகள் விளைவிக்கும் பொருள்களுக்கு அவர்களே விலை நிர்ணயம் செய்து, நஷ்டம் வராமல் பார்த்துக்கொள்ளலாம் என்கிறார்களே..?

தாங்கள் விளைவிக்கக்கூடிய பொருள்களை யாராவது வாங்கிக்கொண்டால் போதும் என்ற நிலையில் விவசாயிகள் இருக்கிறார்கள். அப்படியிருக்கும் அவர்களே விலையைத் தீர்மானிப்பார்கள் என்றால் "மேல் கை" இருந்தால்தான் தீர்மானிக்க முடியும். இரண்டு ஏக்கர் நிலத்தை மட்டும் வைத்துக்கொண்டு கோடிக்கணக்கான விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்கள் சொல்வதெல்லாம் ஒரு கற்பனைவாதம்தான். குறைந்தபட்ச ஆதார விலையைச் சுற்றித்தான் பேச்சுகள் இருக்கின்றன. கடந்த காலங்களில், வார்த்தைகளில் மட்டும் கட்சிகள் சொல்லிவந்த நிலையில், தாங்கள் நடைமுறைப்படுத்தியிருப்பதாகவும், கடந்த காலத்தில் கிடைத்த சதவிகிதத்தைவிட தற்போது அதிக சதவிகித லாபம் கிடைப்பதாகவும் பா.ஜ.க-வினர் சொல்கிறார்களே..?

கடந்த காலங்களில் மற்றவர்கள் எதுவும் செய்யவில்லை என்பதற்கும், தற்போது நாங்கள்தான் செய்கிறோம் என்பதற்கும் எந்த ஆதாரமும் இல்லை. ஏன் இல்லையென்றால், இந்திய உணவு கழகத்திலுள்ள கிடங்குகளில் அத்தனை லட்சம் உணவு தானியங்கள் கையிருப்பில் இருக்கின்றன. அது 1960-களில் தொடங்கி இப்போது வரைக்கும் நடக்கும் விஷயம். கடந்த ஆண்டைவிட இந்த வருடம் 15 சதவிகிதம் கொள்முதல் செய்திருக்கிறோம் என்கிறார்கள். இது வருடா வருடம் நடப்பதுதான். உணவு உற்பத்தி, வருடா வருடம் உயர்ந்து கொண்டேயிருக்கும். அது உயரும்போது வாங்கி வைத்துக் கொள்கிறார்கள். நாங்கள் தான் செய்திருக்கிறோம். எங்களைத் தவிர வேறு யாரும் செய்யவில்லை என்று சொல்வதற்கு ஒன்றும் கிடையாது.

3. டெல்லி விவசாயிகள் போராட்டம் டெல்லி விவசாயிகள் போராட்டம் ஏழு முதல் எட்டு சதவிகிதம் இருந்த விலையை 25 முதல் 35 சதவிகிதம் வரை உயர்த்திக் கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்களே..?

விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலையில் கொடுப்போம். வருமானத்தை இரண்டு பங்கு ஆக்குவோம என்று கூறியதற்கும், இதற்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா என்று தான் பார்க்க வேண்டும். அவர்கள் ஏழு சதவிகிதம் கொடுத்தார்கள். நாங்கள் இவ்வளவு கொடுத்தோம் என்று சொல்வதென்பது அவர்களைவிட நல்ல திருடன் என்பதைப் போலத்தான் இருக்கிறது.

4. எந்த மாநிலத்திலிருந்தும் மற்ற மாநிலங்களுக்கு விவசாயிகள் பொருள்களைக் கொண்டு சென்று, நல்ல விலைக்கு விற்பனை செய்யலாம் என்பது குறித்து...?

இரண்டு ஏக்கர் நிலத்தில் வரக்கூடிய 40 நெல் மூட்டைகளை ஆந்திரா, கேரளா, கர்நாடகாவில் சென்று விற்பனை செய்வீர்களா... விவசாயிகள், தங்களின் சொந்த ஊர்களிலிருந்து முதலில் சென்னைக்கு எடுத்து வர முடியுமா... கீரை அல்லது பூ வியாபாரிகள் குறைந்த அளவிலான இடத்தில் பயிர்செய்பவர்கள், அருகில் இருக்கக்கூடிய நகரங்களுக்குச் சென்று விற்பனை செய்ய முடியும். மற்றவர்களெல்லாம் அப்படிச் செய்ய முடியாது. அப்போது அவர்களெல்லாம் வியாபாரிகளிடம்தான் சென்று கொடுப்பார்கள். விவசாயிகளெல்லாம் அவரவர் பொருள்களை அவரவர்களே விற்பனை செய்ய வேண்டுமென்றால், இந்தியாவில் இருக்கக்கூடிய அத்தனை கோடி விவசாயிகளும் தலையில் கூடை வைத்துக்கொண்டு விற்பார்களா... இவையெல்லாம் வெறும் வாயால் பேசக்கூடியவை. தெருவில் வந்து விற்பனை செய்யக்கூடியவர்கள் யாராவது விவசாயிகளாக இருக்கிறார்களா?

விவசாயிகளே நேரடியாக விற்பனைச் சந்தையில்தான் விற்பனை செய்துவந்தார்கள். அதிலும் கடுமையான கட்டுப்பாடுகள் இருந்த காரணத்தால்தான். அப்படியிருக்கும்போது எத்தனை இடங்களில் உழவர் சந்தை இருக்கிறது, எத்தனை விவசாயிகள் நேரடியாக விற்பனை செய்கிறார்கள், நாட்டிலுள்ள விவசாயிகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு? இந்த இரண்டுக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா?

5. இந்த மூன்று சட்டங்கள் வருவதால் கடந்த காலங்களில் பின்பற்றக்கூடியவை எவையெல்லாம் அடிபடும், விவசாயிகள் எத்தகைய பிரச்னைகளைச் சந்திப்பார்கள்?

விவசாயிகளுக்கு இதுவரை குறைந்த அளவிலான பாதுகாப்பு இருந்தது. அதுவும் அனைத்து விவசாயிகளுக்கும் கிடையாது, எல்லா பொருள்களுக்கும் கிடையாது. அந்தக் குறைந்தபட்ச ஆதார விலையை நாங்களே வாங்கிக்கொள்கிறோம் என்று சொல்லும்போது யாருக்குப் பாதுகாப்பு இருந்ததென்றால் நெல், கோதுமை விவசாயம் செய்யக்கூடியவர்களுக்கு அதுவும் சில இடங்களில் மட்டும்தான். அனைவருக்கும் கிடையாது. அரசுக்கு எவ்வளவு வேண்டுமோ அந்தப் பகுதியில் மட்டும் பாதுகாப்பு வழங்கப்பட்டது. ஒரு குவிண்டாலை இத்தனை ரூபாய்க்கு வாங்கிக்கொள்கிறோம் என்று அரசு சொல்லும். அரசைவிட தனியார் அதிக விலை கொடுக்கிறார்களென்றால் அங்கு கொடுத்துவிடலாம். விவசாயிகளின் இஷ்டம் அது. பா.ஜ.க-வினர் சொல்கிறார்களே... யாரிடம் வேண்டுமாலும் விற்பனை செய்யலாம் என்று இப்போதும் கூட யாரிடம் வேண்டுமாலும் விற்பனை செய்ய முடியும். இவரிடம்தான் விற்பனை செய்ய வேண்டும் என்று எந்தச் சட்டமும் சொல்லவில்லை.

அறுவடை காலகட்டத்தில் உற்பத்தியாகக்கூடிய நெல்லை வாங்கிக்கொள்ளுமாறு கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் காத்திருப்பார்கள். கொள்முதல் நிலையங்களில் வாங்க மறுக்கிறார்கள் என்று விவசாயிகள் எத்தனை போராட்டங்கள் நடத்துவதைப் பார்த்திருக்கிறோம். ஏன் விவசாயிகள் அப்படிச் செய்கிறார்களென்றால், அவர்கள் சொல்லக்கூடிய விலை கிடைக்க வேண்டும் என்பதால்தான். தனியார் அந்த அளவுக்குக் கொடுக்க மாட்டார்கள். அதுதான் உண்மை நிலவரம். அந்த மாதிரி ஒரு சூழல் வந்துவிடக் கூடாது என்று உருவாக்கப்பட்டதுதான் குறைந்தபட்ச ஆதார விலையில் அரசே கொள்முதல் செய்வது. அதற்கு முன்பெல்லாம் வியாபாரிகள் எதிர்பார்த்ததை விட, அதிக அளவிலான பொருள்களை விவசாயிகளை கொண்டு வரும்போது, வியாபாரிகள் சொல்லும் குறைந்த விலைக்கு விவசாயிகள் பொருள்களைக் கொடுக்க வேண்டிய சூழல் ஏற்படும். அதை நிவர்த்தி செய்ய உருவாக்கப்பட்டது இது.

6. மண்டி ராஜ்ஜியங்கள் என்பது அதிகமாக இருக்கின்றன. அவற்றை ஒழித்திருக்கிறோம் என்பதுதான் பா.ஜ.க-வின் கருத்தாக இருக்கிறதே...?

மண்டி ராஜ்ஜியத்தில் லைசென்ஸ் வைத்துக்கொண்டு வியாபாரம் செய்துவருகிறார்கள். அரசும் அவர்களிடமிருந்து கொள்முதல் செய்துவருகிறது. மண்டி ராஜ்ஜியமும் இருக்கிறது குறைந்தபட்ச கொள்முதல் விலையும் செயல்பாட்டில் இருக்கிறது. வியாபாரிகளை ஒழிக்கப்போகிறோம் என்று சொல்லிவிட்டால், யார்தான்

பொருள்களை வாங்க வருவார்கள்? மண்டிகள் என்பவை மாநில அரசுகளின் மேற்பார்வையில்தான் நடக்கின்றன. விவசாயிகள் மண்டி ராஜ்ஜியங்களுக்கு மாநில அரசுகளின் கட்டுப்பாடுகள் சரியாகக் கொண்டு செல்லப்படுகின்றனவா? சரியாகக் கொண்டு செல்லப்படுகின்றனவா என்பதைத் தாண்டி, அதில் பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வரலாம். வியாபாரிகளின் பிடியை, தற்போது இருக்கக்கூடிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, இந்தத் தேதிகளில் பொருள்களை ஏலத்தில் விடப்போகிறோம் என்று சொல்லி, யார் வேண்டுமானாலும் பொருடள்களை வாங்கலாம் என்று அறிவிக்கலாம். ஆனால் அது போலவெல்லாம் செய்யவில்லை. பீகாரில் 2006-ம் ஆண்டே மண்டிகளை அகற்றிவிட்டார்கள். அதற்குப் பிறகு அங்கு என்ன நடந்திருக்கிறது என்று பார்க்க வேண்டும். பீகாரில் அவற்றை அகற்றியதன் விளைவாக, அங்கிருக்கும் விவசாயிகள் பொருள்களை எங்கு வேண்டுமானாலும் விற்பனை செய்கிறார்களா... நினைத்த விலைக்கு விற்பனை செய்கிறார்களா... லாபம் பார்க்கிறார்களா... ஏற்கெனவே 17 மாநிலங்களில் மண்டிகள் இல்லாமல் செயல்பட்டுவருகின்றன. அங்கிருக்கும் விவசாயிகளின் நிலவரம் என்ன... அதற்கு உண்டான சான்றுகள் இருக்கின்றனவா?

7. புதிய வேளாண் சட்டங்கள்: அடக்குமுறைக்கு அஞ்சாத விவசாயிகள் போராட்டம்- இறங்கி வருமா மோடி அரசு? மத்திய அரசு கீழிறங்கி வந்து ஏதாவது செய்யும் என்று நினைக்கீறீர்களா?

இல்லை... நான் அப்படி நினைக்கவில்லை. அரசு வலிமையாக இருக்கிறது. இவர்கள் சரியான விவாதத்தை நடத்தி அனைவருக்கும் புரியவைத்திருந்தால் இவ்வளவு பெரிய போராட்டங்கள் நடந்திருக்காது. ஜி.எஸ்.டி-யை அமல்படுத்தியபோது பலகட்ட பேச்சுவார்த்தைகள், சட்டத் திருத்தங்கள் செய்த பின்னர் அது அமல்படுத்தப்பட்டது. ஆனால், இந்த விஷயத்தைப் பொறுத்தவரை எதையுமே அரசு செய்யவில்லை. நாடாளுமன்றக் குழுவுக்கு அனுப்பாமல், விவாதிக்காமல் அவசரகதியில் கொண்டு வந்ததன் விளைவுதான் இந்த விவசாயிகளின் போராட்டம்.

8. விவசாயிகள் இந்தச் சட்டத்தின் மூலமாகப் பயனடைவார்கள் வரக்கூடிய நாள்களில் அதன் பயன் விவசாயிகளுக்குக் கிடைக்கும் என்று மோடி குறிப்பிடுகிறாரே...?

"பொருளாதாரம் இப்போது 24 என்கிற அளவில் இருப்பதும் எங்களின் முயற்சியால்தான் என்று கூடச் சொல்வார்கள். நாங்கள் இல்லையென்றால் 50-ல் சென்றிருக்கும என்பார்கள். எது நடந்தாலும் எங்களால்தான் என்பார்கள். அதற்கு ஆமாம் சொல்ல பல பேர் இருக்கிறார்கள். அதற்கெல்லாம் பதிலே சொல்ல முடியாது." விவசாயக் கடன்கள் தள்ளுபடி என்பது கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்தவர்கள் செய்த பித்தலாட்டம் என்று பா.ஜ.க-வினர் குறிப்பிடுகிறார்களே..?

"விவசாயிகள் கடனில் இருக்கிறார்கள்" என்று புள்ளிவிவரங்கள் சொல்கின்றன. தற்போது கொடுக்கப்படும் விலை கட்டுப்படியாகவில்லை என்று புள்ளிவிவரங்கள் சொல்கின்றன. அதனால்தான் கடன் அதிகரித்துக்கொண்டே போகிறது என்று நாம் சொல்கிறோம். அதற்கான தீர்வு கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்பது நமது விருப்பம். அதை அரசியல் செய்கிறார்கள் என்று சொல்வதற்கு, பதில் சொல்ல முடியாது.

9. அந்தத் தீர்வுக்குத்தான் இந்தச் சட்டங்களைக் கொண்டு வருகிறோம் என்கிறார்களே ஆளும் தரப்பினர்?

"தீர்வுகள் என்பதை இவர்கள் எதில் காட்டுகிறார்களென்றால், கற்பனை உலகத்தில் காட்டுகிறார்கள். உருவாக்க முடியாத ஒன்றைக் குறித்துப் பேசிவருகிறார்கள். எல்லா இடங்களிலும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டுத்தான் செயல்பட்டுவருகிறது. கட்டுப்பாடற்ற சந்தை என்று எங்கும் இல்லை. ஆனால் இவர்கள் அதைத்தான் தொடர்ந்து சொல்லிவருகிறார்கள். இதற்கான தீர்வுகளை இவர்களுக்குச் சொல்லியெல்லாம் புரியவைக்க முடியாது.

**- நன்றி விகடன் (டிசம்பர்)**

விவசாயிகள் போராட்டத்தின் ஒரு பகுதியாக அரியானா, டில்லி

உங்களுடைய விவசாய நண்பர் மரியாதை

(5ம் பக்கம் பார்க்க)

# லஞ்ச ஒழிப்பு இன்ஸ்பெக்டரே 'லஞ்சம்'

**3 ஆண்டு சிறை தண்டனை விதித்தது கோர்ட்**

**மதுரை, டிச. 15—**

மதுரை அரசு டாக்டர் அசோக்குமார், வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக 2010ம் ஆண்டு லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்குப் பதிவு செய்தனர். இந்த வழக்கில், டாக்டர் அசோக்குமார் மீது நடவடிக்கை எடுக்காமல் இருக்க, அசோக்குமாரின் நண்பர் நமச்சிவாயம், மதுரை லஞ்ச ஊழல் தடுப்பு பிரிவில், அந்த காலகட்டத்தில் பணிபுரிந்த இன்ஸ்பெக்டர் பெருமாள் பாண்டியனை அணுகினார்.

தனக்கு ரூ. 7 லட்சம் கொடுத்தால், டாக்டர் அசோக்குமார் மீது நடவடிக்கை எடுப்பது தவிர்க்கப்படும் என்று, பெருமாள் பாண்டியன் பேரம் பேசினார். இதையடுத்து, முதல் தவணையாக ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபாயை, நமச்சிவாயம் கொடுத்தார். அப்போது, மதுரை மாவட்ட லஞ்ச ஒழிப்பு டிஎஸ்பியாக பொறுப்பில் இருந்த, திருச்சி மாவட்ட லஞ்ச ஒழிப்புத்துறை டிஎஸ்பி ராம அம்பிகாபதி மற்றும் போலீசார், உடனே இன்ஸ்பெக்டர் பெருமாள் பாண்டியனை கையும் களவுமாக கைது செய்தனர்.

இந்த வழக்கில் இன்ஸ்பெக்டர் பெருமாள் பாண்டியன் மற்றும் அரசு அலுவலர் அல்லாத நபர் நமச்சிவாயம் ஆகியோர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இந்த வழக்கு மதுரை லஞ்ச ஒழிப்பு சிறப்பு கோர்ட்டில் விசாரிக்கப்பட்டது. வழக்கில் நேற்று தீர்ப்பு கூறப்பட்டது. இன்ஸ்பெக்டர் பெருமாள் பாண்டியனுக்கு 3 ஆண்டு கடுங்காவல் தண்டனையுடன், 2 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து நீதிபதி உத்தரவிட்டார். நமச்சிவாயத்துக்கு 2 ஆண்டு சிறை தண்டனையுடன், 2 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தார்.

லஞ்ச ஒழிப்பு போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரே லஞ்சம் பெற்ற வழக்கில் கைதாகி, சிறை தண்டனை பெறுவது தமிழகத்தில் இதுதான் முதல் முறையாகும். அரசுத்துறை அதிகாரியாக இல்லாத நபர் ஒருவர், லஞ்சம் கொடுத்ததாக சிறை தண்டனை பெற்றதும் இந்த வழக்கில்தான்.

பட்டுள்ளன. அவர்களின் விவரம்:

1. சஜித் மிர் என்கிற சஜித் மஜித் என்கிற இப்ராகிம் ஷா என்கிற வாசி என்கிற

என்கிற முப்தி அஸ்கர் என்கிற சாத் பாபா என்கிற மவுலானா முப்தி ரௌப் அஸ்கர் (பார்லிமென்ட் மீது 2001ல் நடத்தப்பட்ட தாக்குதலைத் திட்டமிட்டவர்களில்

துணை தலைமை தளபதி)

13. ரியாஸ் இஸ்மாயில் ஷாபந்திரி என்கிற ஷா ரியாஸ் அகமது என்கிற ரியாஸ்

# விவசாயியிடம் லஞ்சம்: உதவி இன்ஜி. கைது



புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே நாகுடியில் கைது செய்யப்பட்ட உதவி பொறியாளர் தென்னரசுவிடம் (வலது ஓரம்) லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் விசாரணை நடத்தினர்.

**அறந்தாங்கி:** புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே நாகுடியில் கல்லணை கால்வாய் பிரிவு அலுவலகம் உள்ளது. இங்கு தென்னரசு (45) என்பவர் உதவி பொறியாளராக பணி புரிந்து வருகிறார்.

கடந்த வாரம் நாகுடி அருகே அத்தாணி கிராமத்தை சேர்ந்த பிரபாகரன்(45) என்ற விவசாயி தன் நிலத்தில்போர்வெல் அமைக்க துறை சார்ந்த தடையில்லா சான்று கோரியுள்ளார். அதற்காக பலமுறை இழுத்தடிப்பு செய்த நிலையில் சான்று வழங்க லஞ்சமாக ரூ.5 ஆயிரம் கேட்டுள்ளார். அதிர்ச்சியடைந்த பிரபாகரன் இது குறித்து புதுக்கோட்டை லஞ்ச ஒழிப்பு போலீசாருக்கு தகவல் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் நேற்று லஞ்ச ஒழிப்பு போலீசாரின் அறிவுறுத்தலின்படி , அலுவலகத்திற்குள் சென்று தென்னரசுவிடம் லஞ்சப் பணத்தை பிரபாகரன் கொடுக்கும்போது, லஞ்ச ஒழிப்புத்துறை டிஎஸ்பி மணிகண்டன் தலைமையிலான போலீசார் தென்னரசுவை கைது செய்துவிசாரணை நடத்தி வருகின்றனர்.

## 2021ல் 23 நாள் பொது விடுமுறை: தமிழக அரசு அறிவிப்பு

தினகரன் நகரம் 16.12.20

## சைதாப்பேட்டை சுற்றுச்சூழல் மற்றும் மாசுக்கட்டுப்பாட்டு வாரிய

# அதிகாரி வீட்டில் ₹10.40 கோடி சிக்கியது

## நகை, பணம், சொத்து ஆவணங்களை கண்டு போலீஸ் அதிர்ச்சி





▸ மாசுகட்டுப்பாட்டு வாரிய அதிகாரி பாண்டியன் வீட்டில் கட்டுக்கட்டாக பறிமுதல் செய்யப்பட்ட ரூபாய் நோட்டுகள், தங்க, வைர, வெள்ளி நகைகள் மற்றும் பொருட்கள். அடுத்தபடம்: பறிமுதல் செய்த பணம், நகைகளை இரும்பு பெட்டியில் வைத்து தூக்கி வருகின்றனர்.

சென்னை, டிச. 16: சைதாப்பேட்டை பனகல்மாளிகையில் உள்ள சுற்றுச்சூழல் மற்றும் மாசுக்கட்டுப்பாட்டு வாரிய கண்காணிப்பாளர் பாண்டியன் அலுவலகம், வீட்டில் லஞ்ச ஒழிப்புத் துறை நடத்திய அதிரடி சோதனையில் கணக்கில் வராத ₹1.37 கோடி ரொக்கம், 3.81 கிலோ தங்கம், வைரம், ₹7 கோடி மதிப்புள்ள சொத்து ஆவணங்கள் என ₹10.40 கோடிக்கு சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

தமிழகத்தில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நவம்பர் மாதம் வருவாய் துறை, வட்டார போக்குவரத்து அலுவலகம், பத்திரப் பதிவு துறை, சுற்றுச்சூழல் மற்றும் மாசு கட்டுப்பாட்டு வாரிய மண்டல அலுவலகங்கள், டாஸ்மாக் கடைகள், தொழிலாளர் நலத்துறை உள்பட பல்வேறு துறைகளில் லஞ்ச ஒழிப்பு போலீசார் அதிரடி சோதனை நடத்தினர். இதில், தமிழகம் முழுவதும் பலர் கைது செய்யப்பட்டும், வழக்கு பதிவு செய்தும் பல கோடி ரொக்கம் மற்றும் 100 கோடிக்கும் மேல் ஆவணம் மற்றும் நகைகளாக லஞ்ச ஒழிப்பு போலீசார் கைப்பற்றினர்.

இந்நிலையில் சென்னை சைதாப்பேட்டை பனகல் மாளிகையில் இயங்கி வரும் சுற்றுச்சூழல் கண்காணிப்பாளராக உள்ள பாண்டியன் தடையில்லா சான்று வழங்க பல லட்சம் ரூபாய் லஞ்சம் வாங்குவதாக லஞ்ச ஒழிப்புத்துறை போலீசாருக்கு தொடர் புகார்கள் வந்தன.

அதைதொடர்ந்து லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் நேற்று முன்தினம் மாலை சைதாப்பேட்டை பனகல் மாளிகையில் இயங்கி வரும் அலுவலகம், கண்காணிப்பாளர் பாண்டியன் வசித்து

| 10.40 கோடி சொத்து விபரங்கள் | |
|---|---|
| வீட்டில் ரொக்கப்பணம் | ₹1.37 கோடி |
| அலுவலகத்தில் ரொக்கப்பணம் | ₹88.500 |
| 3.081 கிலோ தங்க நகைகள் | ₹1.22 கோடி |
| 3.343 கிலோ வெள்ளி பொருட்கள் | ₹1.51 லட்சம் |
| 10.52 கேரட் வைர நகைகள் | ₹5.40 லட்சம் |
| 18 சொத்து பத்திரங்கள் | ₹7 கோடி |
| வங்கியில் கையிருப்பு | ₹38,66,220 |
| வங்கியில் டெபாசிட் | ₹37லட்சம் ரொக்கம் |
| சொகுசு கார் ஒன்று, விலை உயர்ந்த 2 பைக்குகள் | |

வரும் சாலிகிராமம் திலகர் தெருவில் உள்ள வீட்டில் ஒரே நேரத்தில் சோதனை நடத்தினர். இதில், அலுவலகத்தில் கணக்கில் வராத ₹88 ஆயிரத்து 500 பணம் மற்றும் 38 லட்சத்து 66 ஆயிரத்து 220 ரூபாய் கணக்கில் உள்ளதற்கான வங்கி கணக்கு புத்தகம் கைப்பற்றப்பட்டது.

அதேபோல், கண்காணிப்பாளர் பாண்டியன் வீட்டில் நடந்த சோதனையில் போலீசாரே வியக்கும் வகையில் பீரோ மற்றும் ரகசிய அறையில் கணக்கில் வராத கட்டுக்கட்டாக ₹1.37 கோடி ரொக்கம், ₹1.22 கோடி மதிப்புள்ள 3.081 கிலோ தங்கம், ₹1.51 லட்சம் மதிப்புள்ள 3.343 கிலோ வெள்ளி, ₹5.40 லட்சம் மதிப்புள்ள 10.52 கேரட் வைர நகைகள், 18 இடங்களில் வாங்கப்பட்ட ₹7 கோடி மதிப்புள்ள சொத்து ஆவணங்கள், வங்கி கணக்கில் நிரந்தர வைப்பு தொகையாக வைத்திருந்த ₹37 லட்சம், ஒரு சொகுசு கார், 2 பைக்குகள் என மொத்தம் 10 கோடியே 40 லட்சத்து 94 ஆயிரத்து 720 ரூபாய்க்கான சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

இது குறித்து கண்காணிப்பாளர் பாண்டியனிடம் நடத்திய விசாரணையில் அனைத்தும் அவர் பணிகாலத்தில் தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவன உரிமையாளர்களிடம் தடையில்லா சான்று வழங்க லஞ்சமாக வாங்கப்பட்டது என தெரியவந்தது.

இவர் தனது செல்வாக்கை பயன்படுத்தி தமிழகம் முழுவதும் முறைகேடாக பல தொழில் நிறுவனங்களுக்கும் பல லட்சம் லஞ்சம் வாங்கி கொண்டு சுற்று சூழல் தடையில்லா சான்று வழங்கியதும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதைதொடர்ந்து லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் சுற்று சூழல் துறை கண்காணிப்பாளர் பாண்டியன் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த விசாரணை முடிவில் பாண்டியன் கைது செய்யப்படுவார் என்ற லஞ்ச ஒழிப்புத்துறை வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



▸ பாண்டியன்

## தமிழகத்தில் 54 அரசு அலுவலகங்களில்

# ரூ.4.29 கோடி லஞ்சப் பணம் பறிமுதல்

■ சென்னை

தமிழகம் முழுவதும் கடந்த 37 நாட்களில் 54 அரசு அலுவலகங்களில் நடத்தப்பட்ட சோதனையில் ரூ.4 கோடியே 29 லட்சம் லஞ்சப் பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக லஞ்ச ஒழிப்பு போலீஸார் தெரிவித்துள்ளனர்.

**பண்டிகை கால பரிசுகள்**

பண்டிகைகாலத்தைமுன்னிட்டு அரசு அதிகாரிகள் பெருக்கு தனியார் நிறுவனங்கள் பரிசுகள் மற்றும் பணம் கொடுப்பதை வழக்கமாக கொண்டுள்ளனர். அத்தகைய பணம், பரிசுப் பொருட்கள் லஞ்சமாகவே கருதப்படும்.

இதுகுறித்த தகவல்களின் பேரில் லஞ்ச ஒழிப்பு போலீஸார் கடந்த அக்.1 முதல் நவ.6 வரை 54 அரசு அலுவலகங்களில் நடத்தப்பட்ட சோதனையில் 4 கோடியே 29 லட்சத்து 98 ஆயிரத்து 892 ரூபாய், 519 பவுன் நகைகள், 6.5 கிலோ வெள்ளி பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இதில் அதிகபட்சமாக வேலூர் மண்டல மாசுக் கட்டுப்பாட்டு அதிகாரி பன்னீர்செல்வத்தின் வீட்டில் இருந்து ரூ.3 கோடியே 25 லட்சத்து 20 ஆயிரம், 450 பவுன் நகைகள், 6.5 கிலோ வெள்ளி, அவரது அலுவலகத்தில் இருந்து 33 லட்சத்து 73 ஆயிரம் ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

சேலம் மாவட்ட பதிவாளர் துறை ... நாமக்கல் நகர் ... நர் அலுவலகத்தில் ரூ.5 லட்சத்து 25 ஆயிரம், திண்டுக்கல் புவியியல், சுரங்கத் துறை இணை இயக்குநர் பெருமாளிடம் இருந்து ரூ.4 லட்சத்து 10 ஆயிரம், தேனி மாவட்ட சார் பதிவாளர் பாலமுருகனிடம் இருந்து ரூ.4 லட்சத்து 9 ஆயிரம் பறிமுதல் செய்யப்பட்டு இருப்பதாக லஞ்ச ஒழிப்பு போலீஸார் தெரிவித்துள்ளனர்.

'ஸ்பைரோ', 'இந்து தமிழ் திசை' வழங்கும் 'உயர்வுக்...

## நீட் - மருத்துவக் கலந்தாய்வு குறித்து

● ஆன்லைன் வழிகாட்டி நிகழ்ச்சி இன்று காலை

■ சென்னை

'ஸ்பைரோ பிரைம் எஜுகேஷன் இன்ஸ்டிடியூட்' உடன் இணைந்து 'இந்து தமிழ் திசை' வழங்கும் 'உயர்வுக்கு உயர்கல்வி' நிகழ்ச்சியில், நீட் - மருத்துவக் கலந்தாய்வு தொடர்பான ஆன்லைன் கருத்துப் பகிர்வு மற்றும் வழிகாட்டி நிகழ்வு இன்று (ஞாயிறு) காலை 11 மணிக்கு நடைபெறுகிறது.

... நவம்பர் இறுதி வாரத்தில் மருத்துவக் கலந்தாய்வு நடக்க உள்ளது.

இந்நிலையில், 'ஸ்பைரோ பிரைம் எஜுகேஷன் இன்ஸ்டிடியூட்' உடன் இணைந்து 'இந்து தமிழ் திசை' நாளிதழ் வழங்கும் 'உயர்வுக்கு உயர்கல்வி' நிகழ்ச்சியில், நீட் - மருத்துவக் கலந்தாய்வு தொடர்பான வழிகாட்டி நிகழ்வு இன்று ஆன்லைனில் நடக்கிறது.

இன்று காலை 11 மணிக்கு தொடங்க உள்ள இந்த நிகழ்ச்சியில், தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், டாக்டர் எம்ஜிஆர் கல்வி, ஆராய்ச்சி நிறுவனத்தின் துணைவேந்தருமான டாக்டர் எஸ்.கீதாலட்சுமி, சென்னை அண்ட் நாமக்கல் ஸ்பைரோ இன்ஸ்டிடியூஷன்ஸ் கல்வியாளர் எஸ்.எம்.உதயகுமார் ஆகியோர்...

SPIRO | இந்து தமிழ் திசை | உயர்வுக்கு உயர் கல்வி

5 மாவட்டங்களில்

★★★★ திருச்சி 24-12-2020 5

காசோலை வழங்க ஒப்பந்ததாரரிடம்

# ரூ.50 ஆயிரம் லஞ்சம் வாங்கிய வேலூர் 'ஆவின்' மேலாளர் கைது



லஞ்சம் வாங்கிய ஆவின் மேலாளர் ரவியை போலீசார் கைது செய்து விசாரணைக்காக அழைத்துச் சென்ற போது எடுத்த படம்.

வேலூர், டிச.24-

வேலூர் ஆவின் நிறுவனத்துக்கு பால் சப்ளை செய்ததற்கு காசோலை வழங்க ஒப்பந்ததாரரிடம் ரூ.50 ஆயிரம் லஞ்சம் வாங்கிய ஆவின் மேலாளரை லஞ்ச ஒழிப்பு போலீசார் கையும், களவுமாக பிடித்து கைது செய்தனர்.

**ஆவின் நிறுவனத்துக்கு பால் சப்ளை**

வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் (ஆவின்) வேலூர் சத்துவாச்சாரியில் செயல்பட்டு வந்தது.

இந்த 4 மாவட்டங்களில் உள்ள விவசாயிகளிடம் இருந்து பெறப்படும் பால் ஆவின் வளாகத்தில் உள்ள பால் குளிரூட்டும் நிலையத்தில் பதப்படுத்தப்பட்டன.

பின்னர் அவை பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டது. இங்கு திருவண்ணாமலை மாவட்டம் துரிஞ்சாபுரம் அருகே உள்ள சொரக்குளத்தூரை சேர்ந்த முருகையன் (வயது 50) என்பவர் ஒப்பந்த அடிப்படையில் பால் சப்ளை செய்து வந்தார். அவர் கொடுக்கும் ஒரு லிட்டர் பாலுக்கு 40 பைசா வீதம் கமிஷன் வழங்கப்பட்டு வந்ததாக கூறப்படுகிறது.

முருகையன், திருவண்ணாமலை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த விவசாயிகளிடம் இருந்து பால் கொள்முதல் செய்து, ஆவின் நிறுவனத்துக்கு வழங்கி வந்துள்ளார்.

இந்த நிலையில் கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் புதிதாக தொடங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அவர் திருவண்ணாமலை ஆவின் நிறுவனத்துக்கு பால் சப்ளை செய்து வருகிறார்.

**ரூ.50 ஆயிரம் லஞ்சம்**

கடந்த ஆண்டு ஜனவரி முதல் ஆகஸ்டு மாதம் வரை பால் சப்ளை செய்த வகையில் முருகையனுக்கு ரூ.1 லட்சத்து 81 ஆயிரம் ஆவின் நிறுவனம் வழங்க வேண்டியிருந்தது. இந்த தொகையை தரும்படி ஆவின் அதிகாரிகளுக்கு பலமுறை அவர் கோரிக்கை வைத்தும் காலம் கடத்தி வந்துள்ளனர். இந்த நிலையில் ரூ.1 லட்சத்து 81 ஆயிரத்துக்கான காசோலை தயாராக உள்ளது என்று ஆவின் அலுவலகத்தில் இருந்து முருகையனுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதனை பெறுவதற்காக கடந்த 3 நாட்களுக்கு முன்பாக அவர் வேலூர் ஆவின் அலுவலகத்துக்கு வந்தார். அப்போது ஆவின் பால் கொள்முதல் பிரிவு மேலாளர் ரவி (வயது 54) காசோலை வழங்க ரூ.50 ஆயிரம் லஞ்சம் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

**மேலாளர் கைது**

அதனால் அதிர்ச்சி அடைந்த முருகையன் இதுகுறித்து வேலூர் லஞ்ச ஒழிப்பு போலீசில் புகார் அளித்தார், அதையடுத்து போலீசார் ரவியை கையும், களவுமாக பிடிக்க முடிவு செய்தனர்.

இந்த நிலையில் நேற்று காலை லஞ்ச ஒழிப்பு போலீசார் ரசாயன பவுடர் தடவிய ரூ.500, ரூ.2,000 நோட்டுகள் அடங்கிய ரூ.50 ஆயிரத்தை முருகையனிடம் வழங்கினர். அவற்றை அவர் காலை 11.30 மணி அளவில் ஆவின் அலுவலகத்தில் இருந்த மேலாளர் ரவியிடம் கொடுத்தார்.

அதைத்தொடர்ந்து அந்த அலுவலகத்துக்குள் அதிரடியாக நுழைந்த லஞ்ச ஒழிப்பு துணை போலீஸ் சூப்பிரண்டு ஹேமசித்ரா தலைமையிலான போலீசார் மேலாளர் ரவியை கையும், களவுமாக பிடித்து கைது செய்தனர்.

## சான்றிதழ்கள் பதிய
## தேவையான ஆவணங்கள்

| இருப்பிடச்சான்று | சாதிச்சான்று | வருமானச் சான்று |
|---|---|---|
| ✓ போட்டோ<br>✓ ஆதார் அட்டை<br>✓ குடும்ப அட்டை<br>✓ பிறப்பு சான்று<br>✓ பள்ளி சான்று | ✓ போட்டோ<br>✓ ஆதார் அட்டை<br>✓ தந்தை சாதிச்சான்று<br>✓ (அ) உடன் பிறந்தோர் சாதிச்சான்று<br>✓ குடும்ப அட்டை | ✓ போட்டோ<br>✓ ஆதார் அட்டை<br>✓ குடும்ப அட்டை<br>✓ For salary persons SALARY SLIP<br>✓ For Tax payers Pan card Income tax receipt |
| **வாரிசுச் சான்று** | **முதல் பட்டதாரி** | **OBC சான்று** |
| ✓ விண்ணப்பதாரர்(ம) போட்டோ ஆதார் அட்டை<br>✓ அனைத்து வாரிசுகலின் ஆதார் அட்டை<br>✓ இறந்தவர் பெயருள்ள குடும்ப அட்டை ID Card (Adhar, voter ID, DL Any one)<br>✓ இறப்புச் சான்று | ✓ போட்டோ<br>✓ ஆதார் அட்டை<br>✓ பிறப்பு சான்று<br>✓ பள்ளி மாற்றுச் சான்று-TC<br>✓ SSLC, HSC MARK SHEET<br>✓ உடன் பிறந்தோர் மற்றபெற்றோர் கல்விச்சான்றிதழ் | ✓ போட்டோ<br>✓ ஆதார் அட்டை<br>✓ சாதிச்சான்று<br>✓ பெற்றோர் வருமான சான்று (8 laksh per annum) |
| **முழுப்புலம் பட்டா மாறுதல்** | **உட்பிரிவு பட்டா மாறுதல்** | **முதியோர் உதவித்தொகை** |
| ✓ கிரைய பத்திரம்<br>✓ மூல பத்திரம்<br>✓ கணினி சிட்டா<br>✓ EC | ✓ கிரைய பத்திரம்<br>✓ மூல பத்திரம்<br>✓ கணினி சிட்டா<br>✓ EC<br>✓ மனை வரைபடம் | ✓ போட்டோ<br>✓ ஆதார் அட்டை<br>✓ குடும்ப அட்டை<br>✓ வங்கிக் கணக்கு புத்தகம் |

மேற்கண்ட கோரிக்கைகளுக்கு பொதுமக்கள் இடைத்தரகர்களை தவிர்த்து. அரசு அலுவலர்களை நேரில் சந்தித்து பயன் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**கால அவகாசம்**

சான்றிதழ்கள் அனைத்திற்கும் -15 தினங்கள்,
பட்டா மாறுதல் - முழுப்புலத்திற்கு -15 தினங்கள்,
உட்பிரிவு இனத்திற்கு-30 தினங்கள், முதியோர் உதவித்தொகை-1 மாதம்.

Registered with the Registrar of Newspapers for India, New Delhi Regn.No.**TNBIL/2003/10419**

SSP/Chennai City North Divn.
Regn.No.**TN/CCN/671/2018-20**

**PERMITTED TO POST WITHOUT PREPAYMENT VIDE WPP NO. TN/PMG(CCR)/WPP 533/2018-2020**




# லஞ்சம் தவிர்!
# நெஞ்சம் நிமிர்!

# நேர்மை நெறி

**ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்**

ஆசிரியர் : வி.ஆர்.சந்திரன்

இணை ஆசிரியர் : வே.கார்த்திகை ராஜன்

Permitted dates of posting 7th to 13th
Posted at Patrika Channel
(Egmore RMS/1) Chennai. On 12th January 2021

If Undelivered Please Return to:
**ACM, 155, KONNUR HIGH ROAD,**
**AYANAVARAM, CHENNAI-23**

Owned by ANTI CORRUPTION MOVEMENT, CHENNAI and published on its behalf by M.RAGHUPATHY (9444896165) from : No.155, "Nambagam" Konnur High Road, Ayanavaram, Chennai - 600 023 and printed by Thiru.S.G.PARTHASARATHY, at VPS PRINTERS, No.292, T.H.Road, Chennai-600005. Editor : V.R.CHANDRAN.